**கிறுக்கல்கள் கவிச் சித்திரங்களாகும்** **த.ஜெயசீலன்**

‘‘என்னுள் எழும் உணர்வின் அலையோ

முன்னே காணும் காட்சிப் பிழையோ’’

என்று தன் கவிதையை வியக்கும் குகதர்சினியின் முதற்தொகுதி ‘தமிழ்க்கிழவியின் கவிதைகள்’ என்ற மகுடத்துடன் மின் நூலாக வெளிவருகிறது. அண்மையில் முகநூல் வழி அறிமுகமாகியவர் இவர். யாழில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து இன்று புலம்பெயர்ந்துள்ள போதும் ஈழ மண்ணின் மகளாக, தாய் மண்மீதும் தமிழ் மீதும் அளவற்ற பாசமும் பற்றும் கொண்டவராக, சமூகம் மீதான கரிகனையும் வாழ்வின் மீதான தீர்க்கமான பார்வையும் கொண்ட இளம் கவிதாயினியாக, முகிழும் இவரின் சிறியதும் பெரியதுமான 110 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

ஓரளவு ஓசை நயத்துடன் கூடிய, எதுகை மோனைகளைக் கொண்ட மரபு சார்ந்த கவிதைகளாகவும், புதுக்கவிதைகளாகவும், குறள் வெண்பா வகை போன்றதாகவும் ஹைக்கூவை ஒட்டி வருபவையாகவும், கவிதைதுறையில் ஈடுபடுபவர்களில் ஆரம்ப படி நிலை கடந்த கவிதை பாணியைப் பின் பற்றுபவையாகவும் இவரின் கவிதைகள் விளங்குகின்றன.

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தில் பெண் கவிதாயினிகளின் பங்களிப்பும் முக்கியமானது. கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி, அம்புலி, போன்ற போராளிக் கவிஞர்களுடன் ஔவை, ஊர்வசி, மைத்ரேயி, தமிழ் நதி, அனார், பஹீமா ஜகான், என பலர் ஈழத்தவர்களாய் அறியப்பட்ட கவிதாயினிளாக திகழ்கின்றனர். தமிழகத்தில் சல்மா. மாலதி மைத்தி, சுகிர்தராணி, குட்டி ரேவதி போன்ற நவீன கவிதை புனையும் கவிதாயினிகள் பலர் காணப்படுகின்றனர். இந்த தொடர்ச்சியில் பல புதிய கவிதாயினிகள் இன்றும் எழுத்துக் களத்துக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். ஈழத்தை வாழ்விடமாகக் கொண்டு புலம்பெயரந்து கவிதைத்துறையில் ஈடுபடும் சிலரின் வரிசையில் மாலினி மாலா, குகதர்சினி ஆகியோரையும் பார்க்க முடிகிறது. இவர்கள் புலம்பெயர்ந்த மண்ணில் நின்று கொண்டு தமிழ்பணி கவிப்பணி ஆற்றுவது போற்றுதற்குரியது.

கவிதை பற்றிய பல்வேறு கருத்தாடல்கள், கருத்தியல்கள், விமர்சனப் பார்வைகள், கொள்கை கோட்பாடுகள் உள்ளன. இந்நாளிலும் எது கவிதை யார் கவிஞன் என்பவை போன்ற விடைகாண முடியாத கேள்விகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அவரவர்கள் தமக்குத் தெரிந்ததை, தமக்குப் பிடித்ததை, தம் குழு கொள்கை சார்ந்ததை, இக்கேள்விகளுக்கான பதில்களாக சொல்லி வருவதோடு அவை தொடர்பான காரசார விமர்சனங்களிலும் குடுமிப்பிடிச் சண்டைகளில் கூட ஈடுபடுகிறார்கள். இந்நிலைமை நேற்றும் இருந்தது. நாளையும் இருக்கும் என்பதே யதார்த்தமானது. ஓவ்வொருவரும் யானை பார்த்த குருடர்கள் போல தாம்தாம் நினைத்தது, தாம்தாம் உணர்ந்தது, தாம்தாம் அறிந்தது மட்டுமே கவிதை என மல்லுக்கும் நிற்கும் நிலை இன்றும் நீள்கிறது. ஓவ்வொரு இலக்கிய கொள்கை கோட்பாடு சார்ந்த குழுக்களும் வட்டங்களும் தாம் சொல்வது போலிருப்பவையே கவிதைகள் அப்படி எழுதுபவர்களே கவிஞர்கள் ஏனையவை கவிதைகளே அல்ல அவற்றை எழுதுவோர் கவிஞர்களே அல்ல அவை தீட்டுடையவை தீண்டத் தகாதவை என்றும் கூட மாறி மாறித் தீர்ப்புகளை வழங்குகிறார்கள்.

எவர் எது சொன்னாலும் கவிதை என்பது அன்றிலிருந்து இன்றுவரை உயிர்ப்போடு வாழ்ந்து கொண்டுதான் வருகிறது. இது தான் கவிதை என எவரும் வரையறுத்து கவிதைக்கு முடிவுகட்டித் தீர்ப்புரைக்க முடியாது. உலகில் ஒவ்வொருவரது இரசனை விருப்பு வெறுப்பு வேறுபட்டே

இருக்கிறது. அவரவரின் இரசனையை விருப்பு வெறுப்பை கேள்விக்குட்படுத்துவது அடிப்படை மனித உரிமை மீறலாகத் தான் பார்க்கப்பட வேண்டும். கவிதை படைப்பதும் இரசிப்பதும் அவரவர் அடிப்படை உரிமையே.

இந்த அடிப்படைகளில் கவிதாயினி தமிழ்க்கிழவி (குகதர்சினி) யின் கவிதைகளும் நோக்கப்பட வேண்டும். எளிமையான, அதிகம் சோடனைகள் அற்ற, அனேகமாக சொல்ல வேண்டியவற்றை நேரடியாக பூடகமற்று உரைக்கின்ற, இருண்மை மயக்கம் அற்ற, இயல்பாக உள்ளோடும் ஓசை ஒழுங்குகொண்ட, எதுகை மோனைகளை இலாவகமாக உள்வாங்குகிற, அன்றாட விடயங்கள் சூழலில் அப்பப்போ நிகழ்பவை தொடக்கம் தன்னுணர்வைப் பேசுகிற, சமூக சீர்கேடுகளைச் சுட்டிநிற்கின்ற, சமய நம்பிக்கைகளை எடுத்துரைக்கின்ற, சிலவேளை தத்துவாரத்த ரீதியிலும் தனதும் சமூகத்தினதும் வாழ்வை பார்க்க எத்தனிக்கின்ற, வளர்ந்து வருகிற கவிதைகளாக இவரின் கவிதைகள் விளங்குகினறன.

இவைகள் கவிதைகளே அல்ல எனக் கூறவும் ஆட்கள் இருக்கக்கூடும். ஆனால் குகதர்சினி போன்ற இளம் கவிதாயினிகள் அவர்களைக் கணக்கெடாமல் தம்பாட்டில் தம் எண்ணப்படி முயல்வது பலன் தரும் என நினைக்கிறேன். எனினும் கவிதை பற்றிய அடிப்படை விடயங்களைக் கற்றுத் தேறுவதும், தொடர்ச்சியான வாசிப்பும் பயிற்சியும் இன்னோரன்ன கவிதைகளின் பரீச்சயமும், தேடலும், முதிர்ச்சியும், அனுபவமும், எதிர்காலத்தில் தனக்குரிய தனித்துவமான வடிவம் நடை பாடுபொருள் உத்திமுறைமை பற்றிய புரிதல்களுடன் கூடிய கவிதைச் செல் நெறியொன்றை இவர் கண்டடைய நிச்சயம் உதவும்.

. இன்று கவிதைத் துறையுள் புகுவோரின் முன் கிடக்கும் வகை மாதிரிகளே அவர்களை சரியான திசையில் செல்லாமல் தடுக்கிறதோ என எண்ணத் தோண்றுகிறது. தமிழைப் பொறுத்தவரை வேறெந்த மொழிகளிலும் காணக்கிடைக்காத ஆகக் குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகால கவிதைப் பாரம்பரியம் இன்றும் கைவசம் எம்மிடம் இருக்கிறது. இப்பரந்த பரப்பில் பல்வேறு கவிதை வகை மாதிரிகளை இவர் பயில்வது பரீச்சயம் கொள்வது எமது கவிதையின் பரப்பையும் வீச்சையும் நிச்சயம் புரிய வைக்கும்.

**"மெல்லிய காற்றில்**

**மெல்லியலாள் போலசைந்தே**

**தெள்ளிய நிலவொளியில்**

**திகழ்ந்தன நெற்கதிர்கள்"**

என தனது 14 வது வயதில் நான்கு சீர்களைக் கொண்ட அழகான கலிப்பா வடிவத்தில் எதுகை மோனை இயல்பாக வருமாறு எழுதியுள்ளது வியப்புக்குரியது.

'உதிருமென் இலையாளுக்கு' புதிய அர்த்தம் தரும் கவிதையாக மிளிர்கிறது

**"உதிரும் இலைகள்**

**எதிர்நோக்கும் உன் உதிர்வையும்,**

**நிறமாற்றங்கள்**

**எம்வாழ்வின்**

**எதிர்பாராத் திருப்பத்தையும்,**

**மிதிபடும் சருகுகள்**

**மெல்ல உன்னுள்**

**மறுகிடும் ஆன்மாவையும்,**

**நினைவுறுத்த....''**என புதுக்கவிதை பாடுகிறார்.

'பெண்கள் தினம்' என்ற கவிதை ஒட்டுமொத்தப் பெண்களின் ஏக்கத்தைப் ஒரு பெண்ணின் பார்வையில் இருந்து பிரதிபலிக்கிறது.

**''வேராகி விழுதாகுபவள்**

**போராடி நிதம் வாழ்தல்**

**பொறுக்காது இப்பூமி!**

**ஊரோடின் ஒத்தோட**

**ஒருவாழ்த்தோ டமையாமல்**

**ஓர்பாதி என்றவளை**

**எந்நாளும் வாழ்த்துவம்மின்**''...என்கிறார்

'கட்டுப் பெட்டியின் காதல்' இல் பெண்களின் நிலை இன்றும் மாறாதிருப்பதைக் சில வரிகளில் கூறுகிறது

**''சாதனைப் பெண்ணேயானாலும்**

**சீதனம் வேணுமே மணமுடிக்க....''** என்று

'மனிதன்' என்ற சிறு கவிதை இன்று மானுடம் படும் பாட்டைப்

**''பறவைக்குள்ள**

**சுதந்திரம் கூட எனக்கில்லை**

**பரிணாம வளர்ச்சியில்**

**நானோர் முற்பட்ட உயிரி!''** எனப் பாடுகிறது.

'அம்மா' எனும் கவிதையில்

**''ஆறுக்கெணை எண்டால்**

**அஞ்சுக்கே வந்தெழுப்பி**

**'ஆறாச்சு மோனை' என்று**

**தலைதடவும் அலாரமொன்று...** என புது உவமை சொல்கிறார்!

‘சிறைப்பறவை’ என்ற கவிதையல் ஸ்கைப் ஐ கடவுளென்று புதுமை பேசுகிறார்

**“பால்குடி மாறாமப்**

**பார்த்த என்ர பச்சைமண்ணு**

**பால்குடி இந்தா என்று**

**பாசங் காட்டும்**

**திரைமேலே**

**விரும்பியென்னை மணம்முடித்த**

**வேல்விழியாள் என் மனைவி**

**விடைசொல்வாள் நெடிதுயிர்த்து”** என நவீன வாழ்வின் அவலம் பாடுகிறார்.

‘மரணம்’ எனும் கவிதையில்

**“நாடி நரம்பெல்லாம்**

**ஓடித் தளருகையில்,**

**விருந்தாளியாய் அழையாமல்**

**நோய் வந்து சேருகையில்,**

**மனங்கவர் ஒருவர்**

**மனச்சாட்சியின்றிப் பிரிகையில்,**

**மரணங்கூட ஒரு வரமாகும்** என அனுபவ மொழிபேசுகிறார்.

‘மாறுமா இந்த நிலை’ என்ற கவிதையில் ஆணுக்குப் பெண் நிகராக ஆனதை அருமையான சந்தத்தில் இயம்புகிறார்

**“பாரதி கண்ட கனவதை நனவாக்க**

**பட்டங்கள் ஆளவில்லையா?**

**பாரதில் தம் மழலைகள் நலம்பெற**

**திட்டங்கள் தீட்டவில்லையா?**

**போரது முதலாய் பூணும் இல்லறம்வரை**

**சட்டங்கள் காக்கவில்லையா?**

**வேரதோ டறுத்து மடமைகள் களைந்து**

**வாட்டங்கள் நீக்கவில்லையா?**

இலங்கை ஈஸ்ரர் தாக்குதலை நினைந்து புலம்பெயர் மண்ணில் இருந்து எழுதிய

'மஞ்சள் ஆடை கட்டிய வானம்' எனும் கவிதை இவரின் கற்பனை வளத்திற்கு சான்றாக அமைகிறது

**"செந்நிறம் முழுவதும்'**

**சிதறித் தெறித்து**

**சிதிலமுற்ற தேவாலயங்களில்**

**சித்திரம்தீட்டித் தீர்த்ததாலோ**

**வானமி.:.து மஞ்சளாடை**

**அணிந்து காட்சி தருகிறது"**

'மறதி எனும் கவிதை

**"அதுவே பல பிரச்சனைகளுக்கு தீர்வு**

**அதுவே பல வேதனைகளுக்கு ஆறதல்**

**அதுவே நினைவு வலிகளுக்கு நிவாரணி**

**ஆக மொத்தத்தில்**

**அதுவே வரம்"** என அனுபவமுரைக்கிறது.

'தேடுகிறேன்' எனும் கவிதையில்

**'அன்பே சிவம்'**

**எனும் சைவமும்,**

**'உன்போல் உன் அயலவனை நேசி'**

**எனும் கிறீஸ்தவமும்,**

**சுற்றமித்ரர் பால் அன்பும்**

**சற்றும் குறையாத பெருந்தன்மையும்**

**வற்றாது வாழ் எனப் பௌத்தமும்,**

**மனிதரிடத்தில் அன்புகாட்டேல்**

**ஆல்லாஹ் உனக்கன்பு காட்டார்**

**எனும் இஸ்லாமும்,**

**எனதளவில் மனதறிய**

**இறையாம் ஆழியதை**

**எய்திட ஓடும் பெருநதிகள்.**

**இங்கு**

**எங்கிருக்கிறது பேதங்கள்"** என்றும் உலகின் மனச்சாட்சியிடம் எளிமையாய்க் கேட்கிறார்.

இவைபோல அளவில் சிறியவை என்றாலும் அதிக காரம் மிக்கவையாக காதல் புணர்ச்சி, வாழ்க்கைப் பயணம், பெருங்கேள்வி, அழுகையும் மருந்து, சிந்த வையாதே, வரம், தெரிவு, ஞாபகச் சரடு, சிறை, ஒடித்து விடாதே, எழுதுகோல், மே 18, 2009, நினைவுகள், போன்றவை இவரின் வெவ்வேறு பரிமாணம் உடைய கவிதை மனப்பாங்கை வெளிப்படுத்திச் செல்கின்றன.

இறுதியாக 'இருவரிக் கிறுக்கல்கள்' என ஹைக்கூக்களிலிருந்து வேறுபட்ட இரு வரிகளாலான புது வடிவம் ஒன்றை அறிமுகப்படுத்துகிறார்

பதச் சோறுகளாக

**"இறைவன் ஊட்டியது வாயில்**

**இறைவனுக்கு ஊட்டியது வாய்க்காலில்**

**பால்"**

**"கோயில் மரத்தில் தொட்டில்**

**குப்பைத் தொட்டியில் வரம்**

**குழந்தை"**

**"மனிதர்கள் ஜாக்கிரதை**

**நீர்ச்சுவடே ஒளிந்து கொள்**

**செவ்வாய்"** என்பவற்றைக் கூறலாம்

ஒட்டுமொத்தமாக குகதர்சினியின் கவிதைகளில் பல கவி ஒளிக்கிறுக்கள் கசியத் தொடங்கியிருப்பதைக் காண முடிகிறது காலகதியில் இவை கவி ஒளிக் கற்றைகளாகப் பெருகி மானுட மன இருளை அகற்ற பங்களிப்பு வழங்க வாழ்த்துகிறேன்.

08.05.2020